தான் விலை இருக்க வேண்டும். அப்படி இருக்கும்படிதான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் எங்கேயாவது மார்க்கெட் விலையை விட அதிகமாக இருக்கிறது என்றால் அதைத் தவிர்க்க அரசு தக்க ஏற்பாடு செய்யும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பூச்சிக் கொல்லி மருந்து உற்பத்தி செய்யப் பட்ட நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அதைப் பயன்படுத்தினால்தான் பலன் ஏற்படும். உற்பத்தி செய்யப்பட்டு பல நாட்களாகி, காலாவதியாகிவிட்ட பூச்சிக்கொல்லி மருந்து பல விவசாய சேவைக் கூட்டுறவு மையங் களிலும் விவசாயப் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையங்களி லும் விற்கப்படுவதால், அதை வாங்கிப் பயிர்களுக்குப் பயன் படுத்துகின்றபோது என்ன விளைவு வர வேண்டுமோ அதற்கு மாறாக, எதிர்மாறான விளைவு ஏற்படுவதாகப் புகார் கூட தெரி விக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையெனில், இனிமேலாவது அப்படிப்பட்ட சேவை சங்கங்களிலே பணிபுரிபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் தற்போது என்னிடத்திலே எதுவும் இல்லை. புகார் வந்தால் கவனிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS

குளத்தூர் தொகுதி அண்ணா பண்ணை.

288—(*வினா எண் 10609) **திரு. த. மாரிமுத்து:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியில் உள்ள அண்ணா பண்ணையில் என்னென்ன ஆராய்ச்சி நடைபெறுகிறது?

(ஆ) இப்பண்ணை இலாபத்தில் இயங்குகிறதா?

(இ) இதனை விரிவாக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

1987 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியிலுள்ள அண்ணா பண்ணையில் ஆராய்ச்சி ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) ஆம். இப்பண்ணை இலாபத்திலே இயங்குகிறது.

(இ) மேற்படி பண்ணையினை விரிவாக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதியிலே உள்ள பேறிஞர் அண்ணா பெயரிலே அமைந்துள்ள அண்ணா பண்ணை இலாபகரமாக இயங்குகிறது என்று சொன்னார்கள். நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய பேறிஞர் அண்ணா பெயரிலே உள்ள அந்த விவசாயப் பண்ணையில் விவசாயக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலேயும், வடார்க்காடு மாவட்டத்திலேயும்தான் தற்பொழுது விவசாயக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா பண்ணை புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிறது. அந்தப் பிரச்சினை எதுவும் தற்போது எழவில்லை.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் பேசுகின்றபொழுதெல்லாம் புதுக்கோட்டை மாவட்டம் மிகுந்த வறட்சி மிகுந்தது என்று பேசியதை நீங்களெல்லாம் அறிவீர்கள். மேலும் இந்தப் பண்ணை அண்ணா பெயரிலே அமைந்திருக்கிறது. மேலும் அரசு அமைத்துள்ள அந்தப் பண்ணை, அண்ணா பெயரிலே அமைந்துள்ள அந்தப் பண்ணை இலாபகரமாக இயங்குகிறது. மேலும் அங்கே ஆலங்குடி தொகுதியிலே ஒரு பண்ணை, வல்லத்திராகோட்டையிலே ஒரு பழப் பண்ணை போன்ற விவசாயப் பண்ணைகளெல்லாம் இருக்கின்றன. எனவே, இதைக் கருத்திற்கொண்டு நம்முடைய பேறிஞர் அண்ணா அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையிலேயும், நம்முடைய

1987 ஏப்ரல் 4]

மாண்புமிகு அமைச்சரவர்களை ஆளாக்கியதற்கு நன்றிக் கடனாகவும்—அவர்கள் நினைத்தால் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொன்னால் மறுக்க மாட்டார்கள்—அருள்கூர்ந்து அவர்கள் சொல்லி அங்கே அண்ணா பண்ணையிலேயே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதற்கு ஓரேயொரு வழி, அந்தக் கல்லூரி எங்கே ஏற்பட்டாலும் அதற்கு அறிஞர் அண்ணா கல்லூரி என்று பெயர் வைத்துவிடுவதுதான்.

கல்லாற்றிலிருந்து மதுரைக்குக் குடிதண்ணீர்.

289—(*வினா எண் 11577) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளாவின் கல்லாற்றில் இருந்து மதுரைக்குக் குடிதண்ணீர் பெற கேரள அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இது குறித்து இரு மாநிலங்களின் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வரலாம் என கேரள மாநில முதல்வருக்கு நமது முதலமைச்சர் அவர்கள் எழுதியதற்குக் கேரள மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சரிடமிருந்து பதில் வந்துள்ளது. இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரினுடைய குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தக் கல்லாற்றிலேயிருந்து தண்ணீர் கொண்டு வருவதைத் தவிர வைகை ஆற்றிலிருந்து நீர் ஆதாரங்களைப் பெறுவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா உலக வங்கியினுடைய உதவியுடன் அப்படியென்றால் அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்கின்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.